திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய



"கோளறு திருப்பதிகம்"

மதுரை ஆதீன வெளியீடு

01–01–1995

மதுரை ஆதீனத்திற்குச் சொந்தமான தேவஸ்தானங்கள் நான்கு!

★ ★ ★ ★ ★

1. அருள்மிகு. சாட்சிநாத சுவாமி திருக்கோயில்
திருப்புறம்பியம், கும்பகோணம் வட்டம்
தஞ்சை மாவட்டம்.

2. அருள்மிகு. அக்னீஸ்வர சுவாமி திருக்கோயில்
கஞ்சனூர், கும்பகோணம் வட்டம்
தஞ்சை மாவட்டம்.

3. அருள்மிகு.
கைச்சின்னேஸ்வர சுவாமி திருக்கோயில்
கச்சனம், திருத்துறைப்பூண்டி வட்டம்
தஞ்சை மாவட்டம்

4. அருள்மிகு.
பன்னகா பரமேஸ்வர சுவாமி திருக்கோயில்
பன்னத்தெரு, திருத்துறைப்பூண்டி வட்டம்,
தஞ்சை மாவட்டம்.

உ

சிவபெருமான் பேரருள் !

ஏழாம் நூற்றாண்டில்

மதுரை ஆதீனத்தை நிறுவியருளிய

சைவ சமயத்தின் தனிப் பெருந்தலைவர்

திருஞானசம்பந்த சுவாமிகளின்

"கோளறு திருப்பதிகம்"

இந்நூல்

மதுரை ஆதீனம்

"லோககுரு"

292 ஆவது குருமகாசன்னிதானம்

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

திருவுள்ளப் பாங்கின் வண்ணம்

ஆங்கிலப் புத்தாண்டுத் தினத்தை முன்னிட்டு

வெளியிட்டருளப் பெறுகின்றது.

01—01—1995

ஏழாம் நூற்றாண்டில்

மதுரை ஆதீனத்தை நிறுவியருளிய



சைவ சமயத்தின் – தமிழ்ச் சமுதாயத்தின்
தனிப்பெருந்தலைவர்

திருஞானசம்பந்த சுவாமிகள்!

மதுரை ஆதீனம்
292 ஆவது குருமகாசன்னிதானம்
"லோககுரு"



ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

உ

சிவபெருமான் பேரருள் !

நமது மதுரை ஆதீனத்தை ஏழாம் நூற்றாண்டில் நிறுவியருளியவரும், சைவ சமயத்தின், தமிழ்ச் சமுதாயத்தின் தனிப்பெருந் தலைவரும், சைவ சமயக் குரவர் நால்வரில் முதல்வருமான திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய பதிகமே "கோளறு திருப்பதிகமாகும்."

இத்திருப்பதிகத்தை, எங்கும் பயணம் செய்யும் நேரத்தில் பாராயணம் செய்தால், நாள், கோள் இவைகளாலும், மற்றும் பலவிதமான தீங்குகளி லுலும் நாம் காப்பாற்றப் பெறுவோம்.

மெய்யன்பர்கள், இப்பதிகத்தைப் பக்திச் சிரத் தையுடன் ஓதி, அனைத்து நலங்களுடனும் திகழ்ந் திடத் திருவருள் பாலிக்குமாறு பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம் !

திருச்சிற்றம்பலம்.

உ

சிவபெருமான் பேரருள் !

திருஞானசம்பந்த சுவாமிகள்

அருளிய

" கோளறு திருப்பதிகம் "

பண்: பியந்தைக் காந்தாரம்

திருச்சிற்றம்பலம்.

1) வேயுறுதோளிபங்கன் விடம் உண்டகண்டன்
மிகநல்லவீணை தடவி

மாசறுதிங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமேபுகுந்த, அதனால்

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே

ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே.

2) என்பொடுகொம் பொடாமையிவைமார் பிலங்க
எருதேறியழையுடனே
பொன்பொதிமத்தமாலை புனல்சூடிவந்தென்
உளமேபுகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றேடேழு பதினெட்டொடு ஆறும்
உடனாயநாள்கள் அவைதாம்
அன்பொடுநல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே.

3) உருவளர் பவளமேனி யொளிநீறணிந்து
உமையோடும் வெள்ளைவிடைமேல்
முருகலர்கொன்றை திங்கள் முடிமேல் அணிந்தென்
உளமேபுகுந்த அதனால்
திருமகள் கலையது தூர்தி செயமா துபூமி
திசை தெய்வமான பலவும்
அருநெதி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே.

4) மதிநுதன் மங்கையோடு வடபாலிருந்து
மறையோதும் எங்கள் பரமன்

நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்
உளமேபுகுந்த அதனால்

கொதியுறுகாலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்களான பலவும்

அதிகுண நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே.

5) நஞ்சணிகண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடை யேறுநங்கள் பரமன்

துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல் அணிந்தென்
உளமேபுகுந்த அதனால்

வெஞ்சின அவுணரோடும் உரும் இடியும் மின்னும்
மிகையான பூதமவையும்

அஞ்சிடும் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே.

6) வாள்வரி அதளதாடை வரிகோவணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்

நாள்மலர் வன்னிகொன்றை நதி சூடிவந்தென்
உளமே புகுந்த அதனால்

கோளரி உழுவையோடு கொலையானைகேழல்
கொடுநாகமோடுகரடி

ஆளரி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே.

7) செப்பிளமுலை நன்மங்கை யொருபாகமாக
விடையேறுசெல்வன் அடைவார்

ஒப்பிளமதியும் அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமேபுகுந்த அதனால்

வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும்
வினையா னவந்து நலியா

அப்படி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே.

8) வேள்பட விழிசெய்தன்று விடைமேலிருந்து
மடவாள் தனோடும் உடனாய்

வான்மதி வன்னிகொன்றை மலர்சூடிவந்தென்
உளமே புகுந்த அதனால்

ஏழ்கடல்சூழ் இலங்கை அரையன் தனோடும்
இடரான வந்துநலியா

ஆழ்கடல் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே.

9) பலபல வேடமாகும் பரன்நாரிபாகன்
பசுவேறும் எங்கள் பரமன்

சலமகளோடெருக்குமுடிமேல் அணிந்தென்
உளமேபுகுந்த அதனால்

மலர்மிசையோனும் மாலும் மறையோடு தேவர்
வருகாலமான பலவும்

அலைகடல்மேருநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே.

10) கொத்தலர் குழலியோடு விசையற்குநல்கு
குணமாயவேட விகிர்தன்

மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்தென்
உளமேபுகுந்த அதனால்

புத்தரொடு அமணை வாதில் அழிவிக்குமண்ணல்
திருநீறு செம்மை திடமே

அத்தகுநல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே.

11) தேனமர்பொழில்கொள் ஆலைவிளை செந்நெல்துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ

நான்முகன் ஆதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞானமுனிவன்

தானுறுகோளும்நாளும் அடியாரை வந்து
நலியாதவண்ணம் உரைசெய்

ஆனசொல்மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணைநமதே.

திருச்சிற்றம்பலம் !

நமது மதுரை ஆதீனச் சீடர்களில் சிலர்:

1. வடலூர் வள்ளல் இராமலிங்க சுவாமிகள்
2. இராமநாதபுரம் அரசர் பாஸ்கர சேதுபதி
3. பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறன்
4. அம்மன்னனின் துணைவி மங்கையர்க்கரசி
5. மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய பாண்டித்துரைத் தேவர்
6. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
7. நாயக்க மன்னரான விசுவநாத வேந்தன்
8. முதலமைச்சர் அரியநாயக முதலி
9. சென்னை பச்சையப்பன் கல்லூரியை நிறுவிய பச்சையப்ப முதலி
10. முதலமைச்சர் குலச்சிறையார்
11. ஆர். எஸ். நாயுடு பார்-அட்-லா.
12. துறையூர் வீரமார்த்தாண்ட மன்னன்
13. இந்தியாவை ஆண்ட கவர்னர் ஜெனரல்கள் அட்லி, டப்பரின்
14. மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை.

★

292-ஆவது

குருமகாசன்னிதானம் அவர்களின்

அருள் மொழிகளில் சில.

பக்திக்கு முன்னதாகப் பண்பாடு. ஒரு மனிதனுக்குப் பண்பாடு இருக்குமானால் 'பக்தி,' தானாகவே உருவாகிவிடும். பண்பாடு என்றால், பெரியோரிடத்தில் பணிவு, பெரியோர் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல், பிறர் துன்பங்களைக்கண்டு இரக்கப்படுதல், எக்காரணத்தைக் கொண்டும், பிறருக்குத் தீங்கு எண்ணாமை, மனித வாழ்வின் நிலையற்ற தன்மையை எண்ணிப் பார்த்து, மனிதத் தன்மையுடன் வாழ்வது; இவைகளே 'பண்பாடு' என்பதாகும். ஆக, பண்பாட்டிற்கு இவ்வளவு தன்மைகள் உண்டு. இவைகளெல்லாம் கொண்டவனே "உண்மையான பக்தியுள்ள மனிதன் ஆவான்."

மதுரை ஆதீனம்

70, தெற்கு ஆவணி மூலவீதி, மதுரை-1.

வானவில் பிரஸ், மதுரை